**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 106/2023**
**Prosecution Witness - PW1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.மனோ ரசலின் பிரபு |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.08.2026

(Accused produced through VC.)

முதல் விசாரணை–

நான் செம்பன் விளை, செந்தறையில் குடியிருந்து வருகிறேன். கொத்தனார் வேலை பார்க்கிறேன் .தற்பொழுது காணொளி மூலமாக ஆஜராகும் எதிரியை நான் பார்த்திருக்கிறேனா என்றால், பார்த்தது கிடையாது. வழக்கு சம்பந்தமாக சொல்லுமாறு கேட்டால் வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது அழைப்பாணை வந்ததால் நான் வந்தேன். போலீஸ் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் எடுப்பதால் அவருடைய சாட்சியம் பிறள் சாட்சியமாக கருதி அரசு தரப்பு வேண்டுதலின்படி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

கடந்த 6.2.2015 அன்று நானும் ரீகனும் வேலை முடித்து செம்பன் விளை சந்திப்பில் நடந்து வந்து கொண்டிருக்கும் பொழுது ஆஜராகி இருக்கின்ற எதிரி பிரபு என்பவர் கையில் அரிவாளுடன் எபின் என்பவரின் பக்கத்தில் சென்று அவரைப் பார்த்து கெட்ட வார்த்தைகள் பேசி கையில் வைத்திருந்த அருவாளை கொண்டு இதோடு செத்து தொலைந்து போ

என்று கூறி கழுத்தைப் பார்த்து ஓங்கி வெட்டியதாகவும் அவர் பயத்தில் விலகவே அந்த வெட்டு அவர் மீது படாமல் அவர் தப்பியதாகவும், அப்போது அந்த ரோட்டின் மேற்கு பக்கத்தில் இருந்த மின்விளக்கின் உதவியுடன் சம்பவத்தை பார்த்து அவருடைய அம்மா மற்றும் தம்பி சத்தம் போட்டு ஓடி வரவே பிரபு கையில் இருந்து அரிவாளுடன் ஓடி விட்டதாக கேள்விப்பட்டதாக போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக வேண்டும் என்றே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இல்லை.

குறுக்கு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**